**கவனிக்க.**– 2006.11.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1474 - 2006 දෙසැම්බර් 01 වැනි සිකුරාදා - 2006.12.01

1474 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 878 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 878 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 879 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 880 |
| விலைக்கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | – |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 880 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, திசெம்பர் 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 24 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2006 இன் இல. 333*

**தேசிய மாணவ வீரர் படையணி**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்*

*2002, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்னல் ஆக :*

*மேஜர் கே. எஸ். பெரேரா*

*அதியுத்தமனராரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2006.11.03.*

*12-147*

---

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2006 இன் இல. 334*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :*

*இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. தொன் சோமவீர எதிரிசிங்க அவர்கள் உடனடியாக நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் ஆணையாளர் நாயகமாக.*

*12-31*

---

*2006 இன் இல. 335*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :*

*திரு. திஸ்ஸ மகாநாம ஹேரத் அவர்கள் உடனடியாக நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை இரண்டாம் நிலை அடிப்படையில் மின்வலு, சக்தி அமைச்சின் மேலதிக செயலாளராக.*

*12-32*

---

*2006 இன் இல. 336*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :*

*இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. சாம் எதிரிசூரிய அவர்கள் 2006, சனவரி மாதம் 04 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை வர்த்தக, வாணிப நுகர்வோர் அலுவல்கள், விற்பனை அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராக.*

*12-34/1*

---

*2006 இன் இல. 337*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :*

*இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. ரீ. அஷோக்க பீரிஸ் அவர்கள் 2006, சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை வர்த்தக, வாணிப, நுகர்வோர் அலுவல்கள், விற்பனை அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராக.*

*12-34/2*

---

*2006 இன் இல. 338*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :*

*இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திருமதி பி. சிறிவர்தன அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும்வரை தாபனப் பணிப்பாளர் நாயகமாக.*

*12-33/1*

2006 இன் இல. 339

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

இலங்கையில் நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. ஏ. நோபட் அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகமாக.

12-33/2

---

2006 இன் இல. 340

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திருமதி எஸ். கே. வீரதுங்க அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (உள்நாட்டலுவல்கள்) ஆக.

12-33/3

---

2006 இன் இல. 341

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது :

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. எச். உடகந்தகே அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (பொது நிருவாகம்) ஆக.

12-33/4

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 342

**இலங்கை நிர்வாக சேவையின் பதவி நியமனம்**

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி எச். எம். எஸ். ஜயதுங்க அவர்கள் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை 2006.01.16 ஆந் திகதி முதல் பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி டப். எம். எம். ஆர். அதிகாரி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.19 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி ஏ. எச். ஐ. சமரவீர அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.20 ஆந் திகதியில் இருந்து இலங்கை புகையிரத திணைக்களத்தில் மேலதிக புகையிரத முகாமையாளர் (நிருவாகம்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. ஜே. ஜே. ரட்னசிறி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.31 ஆந் திகதியில் இருந்து மின்வலு சக்தி அமைச்சின் பணிப்பாளர் (மின்வலு) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. கே. பீ. பீ. வீ. டி. சில்வா அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.03 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சில் பணிப்பாளர் (மின்வலு) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. எல். டி. சீ. மஹானாம அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.03.01 ஆந் திகதியில் இருந்து கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. எம். டீ. நெவில் பத்மசிறி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.04.07 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. ஜே. ஏ. சரத் ரவீன்திர அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.06.26 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம், மறு அறிவித்தல் வரை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் புலனாய்வு ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் I ஐச் சேர்ந்த திரு. ஏ. எல். எம். சலீம் அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.12.16 ஆந் திகதியில் இருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் I ஐச் சேர்ந்த திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.01 ஆந் திகதியில் இருந்து அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. பி. சிவசங்கர் அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.09.02 ஆந் திகதியில் இருந்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் உதவி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கும்புக்கொல்லே கெதர சுனில் நிசாந்த அவர்கள் மறு அறிவித்தல் வரை 2005.12.23 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கே. ஜே. விஜயசிறி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.13 ஆந் திகதியில் இருந்து பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. ஜீ. வீ. எம். எஸ். பீ. உடோவிட்ட அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.30 ஆந் திகதியில் இருந்து அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த செல்வி துசாரா டி பத்திரணகே அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.06 ஆந் திகதி முதல் பிரதம மந்திரி அலுவலகத்தில் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. பசன் சிறி சஜித் விஜேரத்ன அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.15 ஆந் திகதி முதல் பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.02 ஆந் திகதி முதல் பாராளுமன்றச் சபை முதல்வர் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. ஆர். வீ. என். குணவர்தன அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.15 ஆந் திகதி முதல் தேர்தல் திணைக்களத்தின் உதவி தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கே. அருந்தவராஜா அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.16 ஆந் திகதி தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கே. ஜீ. ஆர். விமலசூரிய அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.18 ஆந் திகதி முதல் குடிவரவு குடியகல்வு உதவிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2006, நவெம்பர் ஆந் திகதி.

12-166

# அரசாங்க அறிவித்தல்கள்

## கிராமப் பெயர்களை மாற்றல்

கீழே தரப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் கிராமப் பெயர், இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு மாற்றப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கலாநிதி சரத் அமுனுகம,
பொது நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2006, நவெம்பர் 08.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | முதலாம் அட்டவணை | இரண்டாம் அட்டவணை |
|---|---|---|---|---|
| மாத்தளை | கலேவெல | ஈ427 வஹக்கோட்டை | வஹக்கோட்டை | வாசலகோட்டை |

12-197

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ருஹுணு அபிவிருத்தி வங்கி - திஹகொட கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் சம்மதிக்கப்பட்டதொரு தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் ஸ்ரீ லங்கா மத்திய வங்கியினாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமையவும் உருவாக்கப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு உரிமை சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் படியும், 2006.06.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான ஜீ. ஜீ. ஸீ. சரித நாணாயக்கார அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.04.19

திகதிக்குரிய இலக்கம் 5968 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் யடியன, கடவெத்துவ. 'ஜயமாலி' வசிக்கும் கங்காணம் கமகே ஜயன்தாநந்த என்பவரினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறுபத்தோராயிரம் ரூபா (ரூ. 61,000) க்கான பணம் றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2005.12.22 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 24% படி அறுபத்தோராயிரம் ரூபா (ரூ. 61,000) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியும், ஏலவிற்பனை செலவும், இதர செலவுகள் போன்றவையும் சேர்த்து ஏதாவது பணம் செலுத்தியிருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு, அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 5968 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவை, போன்றன பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கிப் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

### ஈடு வைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெல்லபடபத்துவை கடவெத்துவயில் அமைந்துள்ள கடுஇம்புல்கஹவத்த எனும் காணியின் 'ஸீ' எழுத்தைக்கொண்ட காணியை பிரித்து வேறாக்கப்பட்ட (மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் இல. ஜீ. 532 என்ற பிரிப்பு வழக்கின் இறுதி தீர்ப்பின் பிரகாரம்) 'எப்' எழுத்தைக்கொண்ட துண்டை மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட 'எப்2' என்ற துண்டுக்கு மாத்தறை அதிகாரம்பெற்ற மானக எச். எஸ். பீ. தஹநாயக அவர்களினால் ஒருங்கு இணைக்கப்பட்ட இலக்கம் 1ஏ யும், 1997 உம், 1998.12.02 இன் வரைபடத்தின்படி எல்லையாக - வடகிழக்கு : இக்காணியின் ஆரம்ப காணி 'பீ' எழுத்தை கொண்ட பாதையும் ; தென்கிழக்கு : இக்காணியின் ஆரம்ப காணியும் 'உ' எழுத்தைக் கொண்ட தென்மேற்கும் மஹமுத்தேட்டுவயும் ; வடமேற்கு : இக்காணியின் 'எப்1' என்ற துண்டும் எல்லையாகக் கொண்ட ஒரு றூட், தசம் ஒன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 00.15பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், நிலம் போன்ற அனைத்தும் அடங்கலாக, கட்டிடங்களும் உட்பட்டதாகும்.

இக்காணி பீ 545/42 உம் 29/349 இன் கீழ் மாத்தறை காணிப் பதிவகத்தில் பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜி. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

12-06/1

---

### றுஹுணு அபிவிருத்தி வங்கி - கெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் றுஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் சம்மதிக்கப்பட்டதொரு தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமையவும் உருவாக்கப்பட்ட றுஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படியும், 2006.06.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான திருமதி சரோஜினி விக்கிரமசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.05.11 ஆந் திகதிக்குரிய இலக்கம் 3987 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் இல. 40, குருந்துவத்த, தலல்ல வடக்கு, கெகனதுரயில் வசிக்கும் மஹதுரகே இநோக உபுல் குமார என்பவரினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 1,97,600) க்கான பணம் றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2005.07.15 ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு 20% படி ஒரு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 1,97,600) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியும், ஏலவிற்பனை செலவும், இதர செலவுகள் போன்றவையும் சேர்த்து ஏதாவது பணம் செலுத்தியிருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு, அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 3987 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவை போன்றன பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கிப் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

### ஈடு வைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெல்லபடபத்துவயில் தலல்லயில் அமைந்துள்ள கதிரவிட குருந்துவத்த, கொடெல்லஹேன என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான கே. சிரிவர்தன என்பவரினால் இலக்கம் 45ஏ/2003 உம், 2003/01/18 ஆந் திகதியின் வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 50 கொண்ட துண்டும் - வடக்கு : இலக்கம் 31. 32, 49 என்ற துண்டும் ; கிழக்கு : இலக்கம் 49 உம் 13 (பாதை) என்ற துண்டும், இலக்கம் 13 உம் 51 என்ற துண்டும் ; மேற்கு : இலக்கம் 51, 30 உம் 31 என்ற துண்டும் எனும் எல்லையாகக் கொண்ட பத்து தசம் இரண்டு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.28பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்தும் பழவர்க்கங்கள், போன்ற யாவும் உட்பட. மேலும் மேலே குறிப்பிட்ட இல. 45ஏ/2003 என்ற வரைபடத்தின் துண்டு இலக்கம் 13 உம் 78 கொண்ட பாதைகளுக்கான வேறாக்கப்பட்ட துண்டுகளுக்கு பாதைக்கான உரிமையும் உண்டு. இச்சொத்துக்கள் பி 496/276 இன் கீழ் 2005.05.11 ஆந் திகதி மாத்தறை காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜி. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

றுஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

12-06/2

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மொனறாகலையிலுள்ள 'ரங்ஷ்யா டிரேட் சென்டரின்' உரிமையாளரான லொக்குஹேவ கமகே ரஞ்சித் என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பதுளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். பீ. ஆனந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, திசெம்பர் 19 ஆந் திகதிய மற்றும் 2004, ஏப்பிறல் 28 ஆந் திகதிய 9964 ஆம், 10193 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும், மேற்கூறப்பட்ட 9964 ஆம், 10193 ஆம் இலக்க ஈட்முறிகளின்மீது 2006, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக எழுபத்திமூன்று இலட்சத்து முப்பத்தையாயிரத்து பதினான்கு ரூபா நாற்பது சதம் (73,35,014.40) கொண்ட தொகையும் 2006, மே 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அறுபத்தேழு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்து பதினேழு ரூபா (ரூ. 67,74,017) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளில் மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிஎவ்) ஆண்டொன்றுக்கு ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியும் சொல்லப்பட்ட லொக்குஹேவ கமகே ரஞ்சித் என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின்மீதுள்ள கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு எழுபத்திமூன்று இலட்சத்து முப்பத்தையாயிரத்து பதினான்கு ரூபா நாற்பது சதம் (73,35,014.40) கொண்ட தொகையும் 2006, மாச்சு 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அறுபத்தேழு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்து பதினேழு ரூபா (ரூ. 67,74,017) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய திகதிகளில் மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவி) ஆண்டொன்றுக்கு ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 9964 ஆம், 10193 ஆம் இலக்கங்களைக் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**9964 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணத்தின், மொனறாகலை மாவட்டத்திலுள்ள மொனறாகலைப் பிரிவில் புத்தள வெதிரட்ட கோறளையிலுள்ள முப்பானவில் அமைந்துள்ளதும், 'எகொடவத்த' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளரான டபிள்யூ. வில்மட் சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1980.06.28 ஆந் திகதிய 212 ஆம் இலக்க வரைபடத்தில் 15 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் குறித்துக்காட்டப்பட்டதும்- வடக்கில் : பிரதான வீதியையும் ஒதுக்கிடத்தையும் ; கிழக்கில் : காணித்துண்டம் 18 ஐயும் ; தெற்கில் : காணித்துண்டம் 16 ஐயும் ; மேற்கில் : காணித்துண்டம் 20 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும், அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து, பரப்பளவில் இரண்டு தசம் பத்தொன்பது பேர்ச்சுகளை (0ஏ. 0றூ. 2.19பே.) கொண்டுள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

மேற்கூறப்பட்ட எகொடவத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும் 212 ஆம் இலக்க வரைபடத்தில் 16 ஆம் இலக்கக் காணித்துண்டமாகக் குறித்துக்காட்டப்பட்டதும்- வடக்கில் : காணித்துண்டம் 15 ஐயும் ; கிழக்கில் : காணித்துண்டம் 18 ஐயும் ; தெற்கில் : காணித்துண்டம் 17 ஐயும் ; மேற்கில் : காணித்துண்டம் 20 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும், அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து, பரப்பளவில் சைபர் தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 0.5பே.) கொண்டுள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

எகொடவத்த என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும் மேற்கூறப்பட்ட முப்பானவில் அமைந்துள்ளதும், மேற்கூறப்பட்ட 212 ஆம் இலக்க வரைபடத்தில் 17 ஆம் இலக்கக் காணித்துண்டமெனக் குறித்துக்காட்டப்பட்டதும்- வடக்கில் : காணித்துண்டம் 16 ஐயும் ; கிழக்கில் : காணித்துண்டம் 20 ஐயும் ; தெற்கில் : காணித்துண்டம் 20 ஐயும் ; மேற்கில் : காணித்துண்டம் 20 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும், பரப்பளவில் தசம் எட்டு ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 0.85பே.) கொண்டுள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். (உ. நி., எல். கே. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.10.17 ஆந் திகதிய 289 ஆம் இலக்க வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது.)

'எகொடவத்த' என அழைக்கப்படுவதும் மேற்கூறப்பட்ட முப்பானவில் அமைந்துள்ளதும் உரிமம்பெற்ற நிலஅளவையாள ரான எல். கே. குணசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.10.17 ஆந் திகதிய 289 ஆம் இலக்க வரைபடத்தில் 01 ஆம் இலக்கக்

காணித்துண்டமெனக் குறித்துக்காட்டப்பட்டதும்- வடக்கில் : மேற்கூறப்பட்ட 212 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 15, 16, 17 என்பவற்றையும், வீதி ஒதுக்கிடத்தையும் ; கிழக்கில் : 212 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 15, 16, 17 என்பவற்யையும், காணித்துண்டம் 20 இன் எஞ்சியுள்ள பாகத்தையும் ; தெற்கில் : கைப்பிடிச்சுவரையும் காணித்துண்டம் 20 இன் எஞ்சியுள்ள பாகத்தையும் ; மேற்கில் : உரிமம்பெற்ற நில அளவையாளரான சீ. பத்மநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 8சீ/82 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும், பரப்பளவில் நான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 04பே.) கொண்டுள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

### 10193 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனறாகலைப் பிரிவு, புத்தள வெதிரட்ட கோறளையின் முப்பானகமவில் அமைந்துள்ளதும், 'பொல்லன்தேகனத்த' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளரான எல். கே. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, மாச்சு 01 ஆந் திகதிய 4327 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 01 ஆம் இலக்கக் காணித்துண்டமாகக் குறித்துக்காட்டப்பட்டதும்- வடக்கில் : எல். கே. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 4030 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டம் 11 ஐயும் ; கிழக்கில் : வீதிக்கான ஒதுக்கிடத்தையும் ; தெற்கில் : மேற்கூறப்பட்ட 4030 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 10 ஆம் இலக்கக் காணித்துண்டத்தின் எஞ்சியுள்ள பாகத்தையும் ; மேற்கில் : மேற்கூறப்பட்ட 4030 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 10 ஆம் இலக்கக் காணித்துண்டத்தின் எஞ்சியுள்ள பாகத்தையும் எல்லைகளாகக் கொண்டதும், கட்டிடங்களுடனும் அதன் மீதுள்ள அத்துடன் அதனோடிணைந்துள்ள மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, பரப்பளவில் ஒன்பது தசம் இரண்டு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 9.2பே.) கொண்டுள்ளதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

12-72

---

### வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கியால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் பணிப்பாளர் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"பத்தரமுல்ல, தலங்கம, கடுவெல வீதி, 204ஏ ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியுமாகிய அத்துல தேசப்பிரிய திரிமாவித்தாரன, கீதா மாலினி ஈஸ்வரகே ஆகிய இருவரும் (இதனகத்துப் பின்னர் "கடனெடுத்தவர்கள்/ஈடுவைத்தவர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. பி. ஆர். ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 17.03.2003 ஆந் திகதிகொண்ட 3159 ஆம் இலக்க ஈட்டு முறியினால் அவர்களால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள்கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பொன்றாக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 1, யோர்க் வீதி, 76 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் சார்பில் (இதனகத்துப்பின்னர் "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஈடும் அடைமானமும் வைத்துள்ளனர் ஆதலாலும்,

மேற்படி அத்துல தேசப்பிரிய திரிமாவித்தாரன, கீதா மாலினி ஈஸ்வரகே ஆகிய இருவரும் மேற்படி முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர் ஆதலால் இப்பொழுது 02.03.2006 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது பதினான்கு இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்றி தொண்ணூற்றிமூன்று ரூபா எட்டு சதம் (ரூபா 14,60,693.08) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

மேற்படி பதினான்கு இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்றிதொண்ணூற்றிமூன்று ரூபா எட்டு சதத்தையும் (ரூபா 14,60,693.08) 2006.03.02 ஆந் திகதியன்றுள்ளவாறு தவணைக் கடன்மீது நிலுவையிலுள்ள பதின்மூன்று இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து நானூற்றித்தொண்ணூற்றேழு ரூபா தொண்ணூற்றொரு சதம் (ரூ. 13,98,497.91) மீது 2006.03.02 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுககு 19% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த திரிவங்க அன்ட் சேனாநாயக்க ஆக்ஷனியர்ஸ் திரு. திவங்க சேனாநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது".

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்று கடுவெல பிரதேச சபை எல்லைகளுக்கட்பட்ட பத்தரமுல்ல-தலங்கம பிரிவு 1 ஆம் இலக்க வட்டாரம், தலங்கம வடக்கில் அமைந்துள்ளதும் போகஹாவத்த அல்லது போகஹாலந்த அல்லது டபுகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் நிலஅளவையாளர் தலைமையதிபதி தயாரித்த 1988, மாச்சு 9 ஆந் திகதிகொண்ட கேஓ6554 என்னும் இலக்கம் கொண்ட வரைபடத்தில் துண்டு 14 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். (இது நில அளவையாளர் தலைமையதிபதி தயாரித்த 1981, பெப்புருவரி 20 ஆந் திகதிகொண்ட 5411 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 1 என்பதன் நிர்ணயிக்கப்பட்ட உட்பிரிவொன்று). அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 14 என்பதற்கு எல்லைகளாக- வடக்கு : இதன் துண்டுகள் 33 (மேலும் சரியாக துண்டு 39) (வீதிக்கென ஒதுக்கப்பட்டது) மற்றும் 13 ; கிழக்கு : இதன் துண்டுகள் 13 மற்றும் துண்டு 29 ; தெற்கு : இதன் துண்டுகள் 29,

28, 15 ; மேற்கு : இதன் துண்டு 15 என்பன அமைந்துள்ளன. மேற்படிகேஓ6554 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு சைபர் தசம் சைபர் ஐந்து சைபர் மூன்று ஹெக்டேயர் (0.0503 ஹெக்டேயர்). இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 1435/194 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி கேஓ 6554 என்னும் வரைபடத்தில் துண்டுகள் 1, 38, 39 என்பன மீதும் அவற்றின் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

76, யோர்க் வீதி,
கொழும்பு 1.

12-75

---

## ருஹுணு அபிவிருத்தி வங்கி- கரந்தெனிய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் சம்மதிக்கப்பட்டதொரு தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் ஸ்ரீ லங்கா மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமையவும் உருவாக்கப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் படியும், 2006.08.08 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பெயரில் சட்டத்தரணியும், பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான திரு. எஸ். எம். பி. சில்வா என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2004.04.21 ஆம் திகதிக்குரிய இலக்கம் 102 என்ற ஈட்டுமுறியின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் வதுகெதர, குருந்துவத்த, 'நதீக' என்ற விலாசத்தில் வசிக்கும் கனேஷ் பிரிசங்க பலபிடியகே/இந்திகா பிரியானி பலபிடியகே/கலுஆச்சி நன்தாவதி என்போரால் கைவிடப்பட்டுள்ளதாலும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து முப்பத்திநான்காயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 1,34,750) க்கான பணம் ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2006.03.16 ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு 20% படி ஒரு இலட்சத்து முப்பத்திநான்காயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 1,34,750) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியும், ஏலவிற்பனை செலவும், இதர செலவுகள் போன்றவையும் சேர்த்து ஏதாவது பணம் செலுத்தியிருப்பின் அவற்றைக் குறைத்தக்கொண்டு, அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 102 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவை, போன்றன பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கிப் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது."

### ஈடு வைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், வெல்லபடபத்துவயில், பரகஹகொட குருந்துவத்தயிலமைந்துள்ள அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. மாதுவகே தேஜசிறி என்பவரால் 1994.12.17, 18 ஆகிய தினங்களில் அளந்து வேறாக்கப்பட்டு அமைக்கப்பட்ட 357 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள மேற்கு குருந்துவத்த இல. 1 என்ற துண்டினால் பிரித்து வேறாக்கப்பட்ட 1பி என்ற துண்டின் - வடக்கு : இக்காணியின் 1ஏ என்ற துண்டும் ; கிழக்கு : இக்காணியின் 1டி, 1ஸி என்ற துண்டுகளும் ; தெற்கு : இக்காணியின் 1ஸி என்ற துண்டும் 4 ஆம் இலக்கத் துண்டும் ; மேற்கு : சிறிய உப்புநீர் ஆறும் எல்லையாகக் ஒரு றூட் பதினேழு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 17.25பே.) விசாலமுடைய காணியின் முழு நிலமும் அதிலடங்கியுள்ள சகல மரநடுகை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய சகலதுமாகும். இக்காணி பலபிடிய காணிகள் பதிவுசெய்யும் அலுவலகத்தில் ஏ200/90 இன்கீழ் 2004.04.23 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டீ. ஜி. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண, மாத்தறை.

12-06/3

---

## மக்கள் வங்கி-நாத்தாண்டிய கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் பிரேரணை*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 19.01.2006 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றபட்டதாக இத்தால் அறியத்தருகிறேன்-

"மாறவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவினி ஏ. எஸ். தஸநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.12.02 ஆந் திகதியும் 2188 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச் சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு நிஸ்ஸங்க ஆரச்சி அப்புஹாமிலாகே குலரத்ன என்பவர் கடப்பாடுடையவராகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியிருப்பதால், அவ்வடைவின்கீழ் பத்து இலட்சத்து அறுபத்திமூவாயிரத்து இருநூற்றைம்பது ரூபா (ரூ. 10,63,250) மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் பத்து இலட்சத்து அறுபத்திமூவாயிரத்து இருநூற்றைம்பது ரூபா (ரூ. 10,63,250) 2005.06.01 ஆந் திகதி முதல் வருடத்துக்கு நூற்றுக்கு பதினெட்டு தசம் இரண்டு ஐந்து (18.25%) வீதம், ஏலவிற்பனைத் தினம்வரை மேலும் வட்டியுடன் தொடர்புடைய மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) சரத்தின்படி அறவிடப்படவேண்டிய பணம், கட்டணம் உட்பட ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட பத்து இலட்சத்து அறுபத்திமூவாயிரத்து இருநூற்றைம்பது ரூபாவையும் (ரூ. 10,63,250) மீட்டெடுப்பதற்காக நீர்கொழும்பு அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. டபிள்யு. பீ. ஸீ. பெரேரா என்பவரால் 2188 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலவிற்பனையில் விற்கப்படவேண்டும் என 1986 ஆம் ஆண்டின்

*32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கத்தின்கீழ் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் வழங்கியுள்ள அதிகாரங்களுக்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது."*

**ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரணம்**

*1. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், புத்தளம் காணிப்பதிவுப் பிரிவிற்குரிய, புத்தளம் கடவத் சதர பத்துவில், புத்தளம் கடவத் சதர கோரளையில், சேனக்குடியிருப்பு எனும் கிராமத்தில் அமைந்துள்ள, வன்களச்சேனை அல்லது பலன்குழிகாணி எனும் காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. எஸ். ராசப்பா என்பவரினால் 1992.01.10 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3383ஏ ஆம் இலக்கம் என்று குறிப்பிட்டிருந்தாலும், தொடர்புடைய வரைபடத்திற்கிணங்க மேலும் பிழையற்றதாக 3383 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 01 ஆம் இலக்கத் தொகுதிக் காணிக்கு எல்லைகள்– வடக்கில் : ஏ. பீன். மரிக்கார் உரிமை கோரும் காணியாலும் ; கிழக்கில் : பரிட்டோ பாபபுள்ளே உரிமைகோரும் காணியாலும் ; தெற்கில் : எம். ஏ. தர்மசிறியும் மற்றையோரும் உரிமைகோரும் காணியாலும் ; மேற்கில் : ஒதுக்கிவைக்கப்பட்ட காணி ஆகிய எல்லைகளுக்குள்ளே அமைந்துள்ள இரண்டு ஏக்கர் மூன்று றூட் பத்து பேர்ச்சஸ் (2ஏ. 3றூ. 10பே.) விஸ்தீரணமுள்ள காணியும், அத்துடன் மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும். மேலும் அக்காணியில் இருக்கும் அனைத்தும் அடங்கும்.*

*2. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், புத்தளம் காணிப்பதிவு பிரிவிற்குரிய புத்தளம் கடவத் சதரவுக்குள்ளே, அனுராதபுர பாதையில், பெரிய வில்லு அல்லது தம்மன்னாவிள்ளயினுள் சேனைக்குடியிருப்பு எனும் கிராமத்தில் அமைந்துள்ள வங்களச்சேனை அல்லது பாலைக்குழி காணி எனும் காணிக்கு எம். தேவேந்திரன், அதிகாரம்பெற்ற நில அளவையாளரினால் 1995 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 08 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1801 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 01 ஆம் இலக்கத் தொகுதிக்கு எல்லைகள்– வடக்கில் : அப்துல் ரிஜாப் உரிமைகோரும் காணியாலும் ; கிழக்கில் : பரிட்டோ பாபபுள்ளே உரிமைகோரும் காணியாலும் ; தெற்கில் : எம். ஏ. தர்மசிறியும் உரிமைகோரும் காணியாலும் ; மேற்கில் : அடி பாதைக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட காணி ஆகிய எல்லைகளுக்குள்ளே அமைந்துள்ள இருபத்தைந்து ஏக்கர் இரண்டு றூட் இருபது பேர்ச்சஸ் (25ஏ. 2றூ. 20பே.) அல்லது பத்து தசம் மூன்று ஆறு ஒன்பது ஆறு ஹெக்டயார் (ஹெக்டயார் 10.3696) விஸ்தீரணமுள்ள காணியும் அத்துடன் மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும். மேலும் அக்காணியில் இருக்கும் அனைத்தும் அடங்கும். குறிப்பிட்டுள்ள காணிக்கு உட்செல்வதற்காக 1801 ஆம் இலக்க வரைபடத்தில் தென்எல்லை நெடுக போகும் அடி பாதை பொதுவாக ஒரு பாதையாக பாவிக்கும் பாதையுரிமையுடன் அடங்கியதாகும்.*

*இக்காணி புத்தளம் காணிப்பதிவு அலுவலகத்தில்* F. *129/130,* F. *87/289 ஆம் இலக்கங்களின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*பிரதேச முகாமையாளர்,*
*சிலாபம்.*

*மக்கள் வங்கி,*
*பிரதேச தலைமை அலுவலகம்,*
*இல. 79, மாறவில பாதை,*
*நாத்தாண்டிய.*

*12–98*

**மக்கள் வங்கி–பிலியந்தலைக் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

*பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 21.07.2006 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :–*

*"பிவீஎஸ் 4810 என்பதன்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டதும் 1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின்கீழும் தற்பொழுது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழும் கூட்டிணைக்கப்பட்டதும் கொழும்பு 5, ஹெவ்லொக் டெரஸ், 291/17 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை யுடையதுமான ஒரு கம்பனியாகிய மக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜயந்தி மெதவத்த அத்தாட்சிப்படுத்திய 14.08.1989 ஆந் திகதி கொண்ட 450 ஆம் இலக்க ஈட்டுமுறி, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. எஸ் டபிள்யு. அமரசிங்க அத்தாட்சிப்படுத்திய 04.09.1992 ஆந் திகதிகொண்ட 2095 ஆம் இலக்க ஈட்டுமுறி என்பனமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது ஆதலால் இப்பொழுது மேற்படி 450 ஆம், 2095 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மீது தொண்ணூறு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூற்றெண்பது ரூபா (ரூ. 90,55,580) மக்கள் வங்கிக்கு வருமதி யாகவும் சேரவேண்டியுள்ளது. ஆதலால் மேற்படி தொண்ணூறு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐந்நூற்று எண்பது ரூபாவையும் (ரூ. 90,55,580) முப்பது இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து எண்ணூற்றைம்பது ரூபா (ரூ. 3,097,850) மீது 12.07.1996 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்திமூன்று சதவீதப்படி (23%) வட்டியையும், ஐம்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எழுநூற்றிமுப்பது ரூபா மீது (ரூ. 59,57,730) 30.05.1997 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீதப்படி (26%) வட்டியையும் மேலும் விற்பனைச் செலவுகளையும் வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப் பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 450 ஆம், 2095 ஆம் இலக்க ஈட்டுமுறி களின்மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவு களும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ரஞ்சித் எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்று நாம்பமுவயில் அமைந்துள்ளதும் நுககஹாலந்த என அழைக்கப்படுவதுமான காணியின் துண்டு சீ என அழைக்கப்படும் காணி அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக– வடக்கில் : டீ. கே. டீ. ரூபதுங்க, டீ. கே. டீ. டேவிட் ஆகியோரின் ஆதனம் ; கிழக்கில் : இதே காணியின் துண்டு 2டீ ; தெற்கில் : பிலியந்தலை–கொட்டாவ வீதி ; மேற்கில் : இதே காணியின் துண்டு 2பீ என்பன அமைந்துள்ளன.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் வை. பீ. கே. கொஸ்தா தயாரித்த 1987, நவெம்பர் 30 ஆந் திகதிகொண்ட 2164 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு மூன்று றூட் முப்பத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 35பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் எம் 1871/51 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி நாம்பமுவயில் அமைந்துள்ளதும் நுககஹாலந்த என அழைக்கப்படுவதுமான காணியின் துண்டு 2டீ என அழைக்கப்படும் காணி, அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக- வடக்கில் : டீ. கே. டீ. ரூபதுங்க, டீ. கே. டீ. டேவிட் ஆகியோரின் ஆதனம் ; கிழக்கில் : வீதி ; தெற்கில் : பிலியந்தலை-கொட்டாவ வீதி ; மேற்கில் : இதே காணியின் துண்டு 2சீ என்பன அமைந்துள்ளன. உத்தரவுபெற்ற நில அளவையாளர் வை. பீ. கே. கொஸ்தா தயாரித்த 2164 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு ஒரு றூட் முப்பத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 35பே.). இது கல்கிசை காணிப்பதிவகத்தில் எம். 1615/267 என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(மேற்கு வலயம் 01).

மக்கள் வங்கி,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

12-99

---

## மக்கள் வங்கி-மாரவில கிளை

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்க கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழ் 20.09.2005 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது :-

"மாரவில பிரதேச நொத்தாரிசு ருவினி ஏ. எஸ். தசநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.03.04 ஆந் திகதிகொண்ட இல. 536 ஈட்டுமுறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் பொன்னம்பெருமகே செபஸ்தியன் ஹர்ப் கிளெரன் பெர்ணாந்து என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும், குறிப்பிட்ட ஈட்டுமுறியின்கீழ் தற்போது நான்கு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்றெண்பது ரூபா (ரூ. 4,29,280) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது. மேலும் நான்கு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்றெண்பது ரூபா (ரூ. 4,29,280) பணத்தொகைக்காக 2005.03.04 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை வருடாந்தம் 19.5% வட்டியும் அத்துடன் குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) பிரிவின்கீழ் பெறவேண்டிய பணமும், கட்டணமும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட நான்கு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து இருநூற்றெண்பது ரூபா (ரூ. 4,29,280) பணத்தொகையை அறவிடுவதற்காக சிலாபம் உத்தரவுபெற்ற ஏலதாரர் டீ. எல். ஜே. நிஷ்ஷங்க அவர்களால் குறிப்பிட்ட இல. 536 ஈட்டுமுறியின்கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணிப்பதிவக பிரிவிற்குச் சொந்தமான தெற்கு பிட்டிகல்கோறளை மத்திய பிரதேச லங்சிகம எனும் இடத்தில் அமைந்துள்ள தல்கஹவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. பெர்ணாந்து அவர்களால் 1985.01.31 ஆந் திகதி அளந்து 1985.02.05 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 6312 வரைபடத்தின் கூறப்பட்டுள்ள காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கில் : டபிள்யூ. டி. ஜே. ஜீ. பெர்ணாந்து மற்றும் எம். ஜீ. மய்க்கல் பெர்ணாந்துவிற்கு சொந்தமான காணியும் ; கிழக்கில் : மீகமுவ-சிலாபம் பாதையும் ; தெற்கில் : பீ. டேசி தல்பதாது மற்றும் பீ. பியுஸ் பெர்ணாந்துவிற்கு சொந்தமான காணியும் ; மேற்கில் : பீ. டேசி தல்பதாதுவிற்கு சொந்தமான காணி ஆகியன எல்லைகளாக அமைந்த றூட் ஒன்று பேர்ச்சஸ் முப்பத்தொன்று தசம் ஐந்து (0ஏ. 1றூ. 31.5பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டிடப் பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி மாரவில காணிப்பதிவகத்தில் J 82/135 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச செயலாளர்,
சிலாபம்.

12-100

---

## மக்கள் வங்கி

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் பிரேரணை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 03.07.2002 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றபட்டதாக இத்தால் அறியத்தருகிறேன் :-

"தங்கொட்டுவ பிரசித்த நொத்தாரிசு திரு. ஆர். ஏ. எப். ரன்தெனிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998.07.23 ஆந் திகதியும் 6737 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டின் பிரகாரமும், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு திருமதி பீ. கே. டி.

எம். பெட்ரீஸியா குணரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1995.02.16 ஆந் திகதியும் 6601 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டின் பிரகாரமும் கொட்டகெதர லியனகே சுனில் ரஞ்சித் பெரேரா என்பவர் கடப்பாடுடையவராகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், அவ்வடைவின்கீழ் ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுபத்தொன்பது ரூபா முப்பத்தைந்து சதம் (ரூ. 1,32,069.35), இருபத்திமூவாயிரத்து அறுநூற்றுமுப்பத்திரண்டு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 23,632.85) மக்கள் வங்கிக்கு அறவிடப்படவேண்டியுள்ளதால், மேலும் ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுபத்தொன்பது ரூபா முப்பத்தைந்து சதத்துக்கும் (ரூ. 1,32,069.35) 2000.02.15 ஆந் திகதி முதல் வருடத்துக்கு நூற்றுக்கு இருபத்தைந்து (25%) வீதமும், இருபத்திமூவாயிரத்து அறுநூற்றுமுப்பத்திரண்டு ரூபா எண்பத்தைந்து சதத்துக்கும் (ரூ. 23,632.85) 2001.08.09 ஆந் திகதி முதல் வருடத்துக்கு நூற்றுக்கு இருபத்தொன்பது (29%) வீதமும், ஏலவிற்பனைத் தினம்வரை மேலும் வட்டியுடன், புரள்வு வரி, பாதுகாப்பு வரி, ஏலவிற்பனைக் கட்டணம் ஆகியவை உட்பட ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு குறிப்பிட்ட ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுபத்தொன்பது ரூபா முப்பத்தைந்து சதத்தையும் (ரூ. 1,32,069.35), இருபத்திமூவாயிரத்து அறுநூற்றுமுப்பத்திரண்டு ரூபா எண்பத்தைந்து சதத்தையும் (ரூ. 23,632.85) மீட்டெடுப்பதற்காக நீர்கொழும்பு அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர் திரு. டபிள்யூ. பீ. ஸீ. பெரேரா என்பவரால் 6737 ஆம், 6601 ஆம் இலக்க அடைவுச்சீட்டுகளின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலவிற்பனையில் விற்கப்பட வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத் தின் 29டி பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது."

**ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரணம்**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு காணிப்பதிவுப் பிரிவுக்குரிய, அளுத்குரு கோரளையில், தூனகஹபத்துவில், கிம்புலாபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, சிலாபம் நகரசபை எல்லைக்குட்பட்ட தெல்கஹவத்த "கொட்டஸ" எனும் பெயருடைய காணியிலிருந்து பிரித்து வேறாக்கப்பட்ட பகுதிக்கு, அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. டபிள்யூ. விதாரன என்பவரினால் 1991.02.25 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1333 ஆம் இலக்க வரைபடத்தில் 1992.07.25 (15) ஆந் திகதி மீண்டும் பிரிக்கப்பட்டு வேறாக்கப்பட்டுள்ள 02 ஆம் இலக்கத் தொகுதிக்கு எல்லைகள்- வடக்கில் : ஓடையினாலும் ; கிழக்கில் : சிறிமுணி எலியஸ் சில்வா உரிமைகோரும் காணியாலும் ; தெற்கில் : மாகாண சபைப் பாதையாலும் ; மேற்கில் : 01 ஆம் இலக்கத் தொகுதி ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த ஒரு நாட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அத்துடன் மண்ணோடு சேர்த்து மரங்கள், பயிர்கள், கட்டிடங்களும். மேலும் அக்காணியில் இருக்கும் அனைத்தும் அடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச செயலாளர்,
சிலாபம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 79, மாறவில பாதை,
நாத்தாண்டிய.

12-101
A3 - B079372

**மக்கள் வங்கி-களனி கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 28.06.2006 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது :-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001.05.15 ஆந் திகதி இல. 5938 மற்றும் 2002.02.13 ஆந் திகதி கொண்ட இல. 6738 ஈட்டுமுறிகளின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில், தெல்கஹவத்த ஆச்சாரிகே எரங்க தீபால் என்பவர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டுமுறியின்கீழ் தற்போது மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 3,46,849.57) பணத்தொகையும் மற்றும் நாற்பத்தோராயிரத்து எழுநூற்றிமூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 41,703.79) பணத்தொகையும் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுமுள்ளது. மேலும் மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்றுநாற்பத்தொன்பது ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 3,46,849.57) பணத்தொகைக்காக 2004.02.25 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை வருடாந்தம் 25% வட்டியும் மற்றும் நாற்பத்தோராயிரத்து எழுநூற்றிமூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 41,703.79) பணத்தொகைக்காக 2006.02.04 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை வருடாந்தம் 27% வட்டியும் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் பிரிவின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய பணங்களும் கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்றுநாற்பத்தொன்பது ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 3,46,849.57) பணத்தொகையும் மற்றும் நாற்பத்தோராயிரத்து எழுநூற்றிமூன்று ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 41,703.79) பணத்தொகையும் அறவிடுவதற்காக கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். இராமநாயக்க அவர்களால் குறிப்பிட்ட இல. 5938 மற்றும் இல. 6738 ஈட்டுமுறிகளின்கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கிறது."

**ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபத்துவ, பியகம பிரதேச சபையின் மாகொல உப அலுவலக எல்லைக்குள் மாகொல வடக்கு வரிப்பணம் இல. 34, தேவால பாதை எனும் இடத்தில் அமைந்துள்ள படதொம்பகஹவத்த மிகவும் சரியான படதொம்பகஹவத்த ஏ2 எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எப். ஜே. பெரேரா அவர்களால் 1997.01.06 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 13502 வரைபடத்தின் லொட் இல. 5 காணித்துண்டின் எல்லைகளாக- வடகிழக்கில் : எம்.

பெஸ்டியன் பிரனாந்து என்பவருக்கு உரித்தான காணியும் ; தென்கிழக்கில் : லொட் 4 மற்றும் 8 உம் ; தென்மேற்கில் : லொட் 6 உம்; வடமேற்கில் : காலம்சென்ற எம். பெஸ்டியன் பிரனாந்து என்பவருக்கு உரித்தான காணியும் ஆகியன எல்லைகளாக அமைந்த பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) விசாலமான காணியும் அதன்கண் அமைந்துள்ள விவசாய கட்டிடப் பொருட்கள் சகலதுமாகும்.

இந்தக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் இல. சீ.471/228 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இல. 13502 வரைபடத்தின் இல. 08 காணித்துண்டின் பாதை உரித்தும் உள்ளடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச செயலாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
மேற்கு வலயம் 111,
131, கண்டி வீதி,
பெலும்மஹர, முதுன்கொட.

12-102

---

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(மஹரகம கிளை)- எதிரிசிங்க தேவ அருண ஆசிரி வீரசிங்க மற்றும சாலிய துஷாந்த கருணாதிலக

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006 நவெம்பர் 2 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"எதிரிசிங்க தேவ அருண ஆசிரி வீரசிங்க மற்றும் சாலிய துஷாந்த கருணாதிலக என்பவர் கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டி. குணதிலக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, மே 28 ஆந் திகதிய 338 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் அத்துடன் 2005 யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு சொல்லப்பட்ட முறிமீது எட்டு இலட்சத்து பதினோராயிரத்து ஐம்பத்தொரு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 8,11,051.78) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும். ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 338 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்தக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட ரூ. 8,11,051.78 பணத்தொகையை 2005, ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எச். மஹநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகிறது."

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் பள்ளேபற்றுவில் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் வேவல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் உடஹகும்புற என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. கே. பி. ஓக்கந்தபொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000 யூன 10 ஆந் திகதிய 178/2000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு X 4 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு X4 இன் எல்லைகள் - வடக்கு : 4904 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு IL ( 2 அடி அகல வீதிக்கான ஒதுக்குகை) ; கிழக்கு : காணித்துண்டு X5 ; தெற்கு : 404/1999 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 5 அடி அகல வடிகால் வழியேயான ஒதுக்குகை ; அத்துடன் மேற்கு : காணித்துண்டு X3 அத்துடன் 178/2000 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

(2) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் பள்ளேபற்றுவில் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் வேவல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் உடஹகும்புற என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. கே. பி. ஓக்கந்தபொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000 யூன் 10 ஆந் திகதிய 178/2000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு X 5 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு X5 இன் எல்லைகள் - வடக்கு : 4904 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு IL ( 2 அடி அகல வீதிக்கான ஒதுக்குகை) ; கிழக்கு : காணித்துண்டு X6 மற்றும் 404/1999 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 5 அடி அகல வடிகால் வழியேயான ஒதுக்குகை ; தெற்கு : 404/1999 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 5 அடி அகல வடிகால வழியேயான ஒதுக்குகை ; அத்துடன் மேற்கு : காணித்துண்டு X4 அத்துடன் 178/2000 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் ஏழு தசம் ஆறு ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7.67பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

(3) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் பள்ளேபற்றுவில் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைகளுக்குள் வேவல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் உடஹகும்புற என அழைக்கப் படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. கே. பி. ஓக்கந்தபொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000 யூன் 10 ஆந் திகதிய 178/2000 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு X 6 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதிலுள்ள

எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு X6 இன் எல்லைகள் - வடக்கு : 4904 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு IL ( 2 அடி அகல வீதிக்கான ஒதுக்குகை) ; கிழக்கு : அதே காணியின் பாகம்; தெற்கு : 404/1999 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 5 அடி அகல வடிகால வழியேயான ஒதுக்குகை ; அத்துடன் மேற்கு : காணித்துண்டு X5 அத்துடன் 178/2000 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் ஆறு தசம் ஒன்று ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.17பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டி. குணதிலக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, மே 28 ஆந் திகதிய 338 ஆம் இலக்க முறியின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு. (சட்டம்) / சபைச் செயலாளர்.

12-170/ 2

---

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மாத்தறை கிளை) - ஜசின் கந்தகே தொம்ப்ஸன்

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006 நவெம்பர் 2 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"ஜசின் கந்தகே தொம்ப்ஸன் என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் மாத்தறை பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. சேனரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, மார்ச் 04 ஆந் திகதிய 2887 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் அத்துடன் 2006 பெப்புருவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு சொல்லப்பட்ட முறிமீது ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றெண்பத்தொரு ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 7,50,881.62) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும். ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 2887 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்தக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட ரூ. 7,50,881.62 பணத்தொகையை 2006, மார்ச்சு 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகிறது."

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோறளையின் கொட்டவில மற்றும் கம்புறுகமுவ என்னும் கிராமங்களில் அமைந்துள்ளதும் பின்னகொடயாவத்தை எஸ்டேட் என அழைக்கப்படுவதுமான காணியின் காணித்துண்டு 3, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் குசுமான் சிரிவர்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001 யூலை 13 ஆந் திகதிய 358/2001 ஆம் இலக்க வபைடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 11 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 11 இன் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட 358/2001 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 13 மற்றும் 10 ; கிழக்கு : சொல்லப்பட்ட 358/2001 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 9 ; தெற்கு : சொல்லப்பட்ட 358/2001 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 13 ; அத்துடன் மேற்கு : சொல்லப்பட்ட 358/2001 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 13. அத்துடன் மாத்தறை மாவட்டக் காணிப் பதிவகத்தில D 904/ 246 என்னும் குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 358/2001 ஆம் இலக்க வரைபடத்தின் படி எட்டு தசம் மூன்று ஒன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.31பே.) (0.0212 ஹெக்.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து.

358/2001 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 6 மற்றும் காணித்துண்டுகள் 9, 21, 45, 51, 63, 104 என அடையாளமிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் மீதும் அதன் வழியாகவும் உள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு. (சட்டம்) / சபைச் செயலாளர்.

12-170/ 1

---

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(செட்டியார் தெரு கிளை) - கதிராசன் சுதாகரன்

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006 நவெம்பர் 2 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்

றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப் பட்டது :-

"கதிராசன் சுதாகரன் என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. ஆர். டி. சில்வா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, யூன் 01 ஆந் திகதிய 1120 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் அத்துடன் 2006 யூன் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு சொல்லப்பட்ட முறிமீது நாற்பத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாராயிரத்து அறுநூற்றி எண்பத்திநான்கு ரூபா இருபது சதம் (ரூ. 42,56,684.20) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும். ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1120 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்தக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட ரூ. 42,56,684.20 பணத்தொகையை 2006, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் பி. கே. இ. சேனபதி என்பவரால் பகிரங்க ஏலம் மூலம விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகிறது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளையின் றாகம்பற்றுவில் வத்தளை மாபோல நகர சபை எல்லைகளுக்குள் அவெரிவத்தை வீதியில் அமைந்துள்ளதும், அவெரிஹேன வீதி, 39/6 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டதும் "ஹக்குறன்னெவத்தை" மறுபெயர் "கஹாட்டகஹவத்தை" என அழைக்கப்படுவதுமான காணியிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். ராசப்பா எனபவரால் தயாரிக்கப்பட்ட 2004 ஏப்பிறல் 22 ஆந் திகதிய 133/2004 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்தண்டு U1A என அடையாளமிடப்பட்டது மான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 1A இன் எல்லைகள் - வடக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1924 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு T ; கிழக்கு : அவெரிவத்தை வீதி 49 மற்றும் 49/1 என்னும் வரிமதிப்பீடு இலக்கங்களைக் கொண்ட வளவுகள்; தெற்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகாநாதன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2180 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு U2 அத்துடன் மேற்கு : 20 அடி அகல வீதி. அத்துடன் சொல்லப்பட்ட 133/2004 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் முப்பத்துமூன்று தசம் எட்டு நாலு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 33.84பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு. (சட்டம்) / சபைச் செயலாளர்.

12-170/3

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நுகேகொடை கிளை) - புத்தகோறளலாகே சந்திரப்பிரிய தேவ்கும் டயஸ் விஜேதிலக

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006 நவெம்பர் 2 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"புத்தகோறளலாகே சந்திரபிரிய தேவ்கும் டயஸ் விஜேதிலக என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யு. எஸ். கே. ஹேரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, சனவரி 22 ஆந் திகதிய 589 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் அத்துடன் 2006 யூன் 12 ஆந் திகதியன்று உள்ளவாறாகத ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு சொல்லப்பட்ட முறிமீது மூன்று இலட்சத்து இருபத்துமூவாயிரத்து அறுநூற்றி முப்பத்தாறு ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூ. 3,23,636.58) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும். ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 589 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்திற்கு ஈடுவைககப்பட்டுள்ளனவுமான ஆதனமும் வளவும் சொல்லப்பட்ட ரூ. 3,2.636.58 பணத்தொகையை 2006, யூன் 13 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகிறது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளையின் பள்ளேபற்றுவில் ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் பிற்றகோட்டே என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் இ. டபிள்யு. பெரேரா மாவத்தை எனவும் அழைக்கப்படுவதான கோட்டே வீதி, 418/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைத் தற்போது கொண்டதும் "அகலபோதவத்தை" மறுபெயர் "கெட்டகெலகஹ வத்தை" என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, ஒற்றோபர் 1 ஆந் திகதிய 415 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு A என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு A இன் எல்லைகள் - வடக்கு : ஒரு வீதி (8 அடி அகலம்) ; கிழக்கு : 1307 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள

காணித்துண்டு 4 ; தெற்கு : கோட்டே வீதி 416 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கம் அத்துடன் மேற்கு : கோட்டே வீதி 418/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கம் அத்துடன் கொழும்பு மாவட்டக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் M 2369/162 இல் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட் 415 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் நாலு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யு. எஸ். கே. ஹேரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, சனவரி 22 ஆந் திகதிய 589 ஆம் இலக்க சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு. (சட்டம்) / சபைச் செயலாளர்.

12-170/4

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0650 - 5616660 - 001- (பெலியத்த கிளை)

1990 ஆம் ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2006.09.18 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

"பெலியத்த, கெட்டமான்ன, கெட்டமான்ன வடக்கைச் சேர்ந்த குறுமுனி ராஜ் ஹெலன் த சொய்ஸா என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு தீபானி ரங்கே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001 ஏப்பிறல் 6 ஆந் திகதிய 272 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2004 பெப்புருவரி 26 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது மூன்று இலட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரத்து எண்பத்தொரு ரூபா ஐம்பத்திமூன்று சதம் (ரூ. 3,92,081.53) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 3.92,081.53 பணத் தொகையையும் 2004, பெப்புருவரி 27 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு சதவீதப்படி (26%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழிததும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 272 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் மேலும் விபரிக்கபபடுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஜ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கங்கபடபத்துவில் கிரிந்த மற்றும் ஹெட்டியாவல கிராமங்களில் அமைந்துள்ள 'தலக்கனத்தேஹேன' அல்லது 'ஹெட்டியாவலவத்த' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. விமலரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.03.11 ஆந் திகதிய 81 ஆம் இலக்க வரைபடத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட துண்டுகள் 66 மற்றும் 67 என்று குறிப்பிடப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள நிலம், மரங்கள், தோப்புகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட துண்டுகள் 66 மற்றும் 67 இன் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் துண்டு 65 ; கிழக்கு : அதே காணியின் துண்டு 77 ; தெற்கு : அதே காணியின் துண்டு 68 ; மேற்கு : அதே காணியின் துண்டு 64 (வீதி), முப்பத்திரண்டு தசம் நான்கு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 32.42பே.) விஸ்தீரணமுள்ள இது மாத்தறை காணிப்பதிவகத்தில் C 613/68 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட துண்டுகள் 66 மற்றும் 67 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. விமலரத்னவின் வரைபடம் இல. 553 இல் துண்டுகள் 66 மற்றும் 67 எனக் காட்டப்பட்டுள்ளன.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 81 இல் துண்டுகள் 64 மற்றும் 139 இன் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-182/1

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 9957 - 00330731 - 001 (தனியார் வங்கித் தொழில் அலகு கிளை)

1990 ஆம் ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2006.11.06 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

"இலங்கைக் குடியரசில் கந்தளாய், சீனிபுர, ஏரிஎல் ஃபாமில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகததைக் கொண்டதும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதுமான ஒரு கம்பனியாக

அக்றோ டிரேடிங் லங்கா (பிறை) லிமிட்டெட் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் சொல்லப்பட்ட அக்றோ டிரேடிங் லங்கா (பிரை) லிமிட்டெட்டால் நிறைவேற்றப்பட்ட 2005.10.04 ஆந் திகதியிடப்பட்டதும் திருகோணமலை காணிப் பதிவகத்தில் ஜீஎம்/10/152 இன்கீழ் பதிவு செய்யப்பட்டதுமான இயந்திர ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2006 செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட அக்றோ டிரேடிங் லங்கா (பிறை) லிமிட்டெட்டால் நிறைவேற்றப்பட்ட 2005.10.04 ஆந் திகதியிடப்பட்டதும் திருகோணமலை காணிப் பதிவகத்தில் ஜீஎம்/10/152 இன்கீழ் பதிவு செய்யப்பட்டதுமான இயந்திர ஈட்டுமுறியின் மீது இரண்டு கோடியே அறுபத்திநான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து நான்கு ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 2,64,45,954.25) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 2,64,45,954.25 பணத் தொகையையும் 2006, ஒற்றோபர் 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அற வீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட அக்றோ டிரேடிங் லங்கா (பிரை) லிமிட்டெட்டால் நிறைவேற்றப்பட்ட 2005.10.04 ஆந் திகதியிடப்பட்டதும் திருகோணமலை காணிப் பதிவகத்தில் ஜீஎம்/10/152 இன்கீழ் பதிவு செய்யப்பட்டதுமான இயந்திர ஈட்டு முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும், இதற்கான அட்டவணையில் மேலும் விபரிக்கப்படுவதுமான பொறித் தொகுதியும் இயந்திரங்களும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

| இனம்/மாதிரி | வகை | இயந்திர இல. |
|---|---|---|
| (1) டொமினேரியர் அறுவடை இயந்திரம் | 156 | 156-07927 |
| (2) ஜோன் டியர் 4 சில்லு உழவுயந்திரம் | 6205 | L6205M294172 |
| (3) ஜோன் டியர் 4 சில்லு உழவுயந்திரம் | 6205 | L05205M294527 |
| (4) போர்ட் 4 சில்லு உழவுயந்திரம் | 363,D7 | 55278 ANORA-1 |
| (5) போர்ட் 4 சில்லு உழவுயந்திரம் | 8340 | WK553796 |
| (6) களையகற்றி-அமேஸோனன் வேர்க் | ED601 | |
| (7) றெயின ஸ்ரார் வு75-270 நீர்ப்பம்பி | VM-MORTORI | 2105MEC-MR-65/3/2A |
| (8) அமேஸோனன் பிளான்டர் | | |
| (9) அமேஸோனன் - டிஸ்க் ஹறோ | ED601 | B402SE300A54 |
| (10) தாய் ஹறோ | 160-724 | 160-724 |
| (11) தன்னியக்க எடையிடும் இயந்திரம் | Wegeberich | |
| (12) 03 எண். உருக்குத் தாங்கிகள் செப்பு அடிப்பாகத்துடன் | Tantri | 101, 102, 103 |
| (13) கிறெய்ன் கிளீனர் | Fowler Wrstrup | |
| (14) 03 எண். பக்கற் எலிவேட்டர்ஸ் | Fowler Wrstrup | |
| (15) பர்னருடன் உலர்த்தி | SL1000 | 2845 |
| (16) MS உருளையான டீசல் தாங்கி வால்வுகளுடனும் பொருத்திகளுடனும் | | |
| (17) ஸ்ராட்டர் மற்றும் கியர் பெட்டியுடன் பெல்ட் கொன்வேயர் | | FL0309 |
| (18) டீசல் ரெம்பெஸ்ட் ஜெனரேட்டர் | Volvo Penta | 0141605-09 |
| (19) அறை காற்றுச்சீராக்கி | Haier | |
| (20) ஸ்பிளிற் ரைப் காற்றுச்சீராக்கி | LG | LSK 1862CI |
| (21) அவெறி எடையிடும் தராசு | SL 3901 AAG | 2K102 |
| (22) ஒக்ஸி/அசெட்டலீன் ஒட்டியிணைக்கும் தொகுதி | | |
| (23) பெடஸ்ரஸ் டிறில் | SJQ-5132 | SJQ-5132 |
| (24) லப்றபோர் றிப்பேர்ஸ் (02 எண்.) | Lemken | WO 240254 |
| (25) அமேஸோனன் பசளை பரப்பி | | |
| (26) அவுஸ்றியன் பவுர் றெயின் ஸ்ரார் | T31 | 00X131278 |
| (27) விதைகள்/தூசி நீக்கி (02 எண்.) | | |
| (28) 02 எண். துறப்பணங்கள் | | |
| (29) 25 எண். தூவிகள் | Pears Park | |
| (30) பண்ணை உபகரண உதிரிப்பாகங்களும் நிழல் வலைகளும் | | |
| (31) றெஹோ கலப்பை | | |
| (32) மின்சார வேலி இனங்கள் | | |
| (33) 02 எண். ரன்றி டிரெயிலர்கள் மற்றும் 01 எண். டிரெயிலரில் பொருத்திய நீர் பவுஸர் | | |
| (34) ஆர்க் வெல்டிங் டிரான்ஸ்போமர் | WLNE 350 A/S | 401213 |

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-182/2

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலவின் வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 9957 – 00330731 – 001– (தனியார் வங்கித் தொழில் அலகு கிளை)

1990 ஆம் ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலவின் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2006.11.06 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :–

"பண்டாரவளையைச் சேர்ந்த செல்லையா பிரகாஷ் என்பவர் 'கடனெடுத்தவர்/ஈடுவைத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ரீ. எச். டி. எல். எல். ஜயசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.09.21 ஆந் திகதிய 1165 ஆம் இலக்க மற்றும் 2005.12.30 ஆந் திகதிய 1209 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2006 மே 26 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது இரண்டு கோடியே முப்பத்தாறு இலட்சத்து நாற்பத்தெண்ணாயிரத்து எழுநூற்றறுபத்தாறு ரூபா பதினான்கு சதம் (ரூ. 2,36,48,766.14) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 2,36.48,766.14 பணத் தொகையையும் 2006, மே 27 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்து மூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1165 மற்றும் 1209 ஆம் இலக்க முறிகளினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும், இதுற்கான அட்டவணையில் மேலும் விபரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

#### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவு, கும்பல்வெவ கோறளேயின் இடமகம மற்றும் பட்டியகும்புறவில் அமைந்துள்ள "ரத்னகிரி எஸ்டேட்" என்றழைக்கப்படுவதும் உ. நி. எம். டபிள்யூ. ஒறெப்ரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1950, பெப்புருவரி மற்றும் நவெம்பர் தேதியிட்ட 1344 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 9 எனக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும் இதன் எல்லைகள் – வடக்கு : அதே காணியின் பகுதியான விலேஜ் கார்டன் மற்றும் TP 340179 ; கிழக்கு : எல மற்றும் துண்டுகள் 11 மற்றும் 17 ; தெற்கு : அதே காணியின் பகுதி ; மேற்கு : துண்டுகள் 12 மற்றும் 8. வரைபடம் இல. 1344 இன்படி இது பன்னிரண்டு ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்று பேர்ச்சஸ் (12ஏ. 2றூ. 13பே.) விஸ்தீரணமுள்ளது.

மேற்படி காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் யு. நிமால் பீ. விஜேவீரவால் தயாரிக்கப்பட்ட 2000.07.12 ஆந் திகதிய 8024 ஆம் இலக்க வரைபடத்தின்படி மீள அறவிடப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டதன் அதற்கிணங்க,

(1) ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவு, கும்பல்வெவ கோறளேயின் இடமகம மற்றும் பட்டியகும்புறவில் அமைந்துள்ள "ரத்னகிரி எஸ்டேட்" என்றழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ. யு. நிமால் பீ. விஜேவீரவால் தயாரிக்கப்பட்ட 2000.07.12 ஆந் திகதிய 8024 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்டுள்ளதுமான காணிப் பங்கீடு அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும் இதன் எல்லைகள் – வடக்கு : வரைபடம் 1344 இல் துண்டு இல. 2 ; கிழக்கு: துண்டு 3 ; தெற்கு : வீதி ; மேற்கு : வரைபடம் இல. 1344 இல் துண்டு 5. மூன்று ஏக்கர் (3ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுள்ள இது பதுளை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(2) ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவு, கும்பல்வெவ கோறளேயின் இடமகம மற்றும் பட்டியகும்புறவில் அமைந்துள்ள "ரத்னகிரி எஸ்டேட்" என்றழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ. யு. நிமால் பீ. விஜேவீரவால் தயாரிக்கப்பட்ட 2000.07.12 ஆந் திகதிய 8024 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 3 எனக் காட்டப்பட்டதுமான காணிப் பங்கீடு அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும் இதன் எல்லைகள் – வடக்கு : வீதி மற்றும் கிராமக் காணிகள் ; கிழக்கு : துண்டு 2 மற்றும் வீதி ; தெற்கு : துண்டு 1 மற்றும் ஜயதிஸ்ஸவின் காணி ; மேற்கு : வரைபடம் இல. 1344 இல் துண்டுகள் 8 மற்றும் 12. ஒன்பது ஏக்கர் ஒரு றூட் ஒன்பது பேர்ச்சஸ் (9ஏ. 1றூ. 9பே.) விஸ்தீரணமுள்ள இதுத பதுளை காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் – சட்டம்.

12–182/3

---

### கந்துரட்ட அபிவிருத்தி வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடனை மீள அறவிடல (விசேட நடவடிக்கை) சட்டத்தின் 4 ஆம் விதிமுறையின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தித வங்கிச் சட்டத்தின் 42 (ஆ) ஆம் சரத்தின் நடவடிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்ட கந்துரட்ட அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் மூலம் 2006.02.27 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

"குருதெனிய, இலுக்தொர வத்தை, இலக்கம் 101/2 இல் வசிக்கும் கன்னிலே கெதர ரனசூர ஹீன்கெந்த வாசல முதியன்சேலாகே குசும் சித்ரா சமரதிவாகர என்பவரால் கந்துரட்ட அபிவிருத்தி வங்கியின் சார்பில் கண்டியில் வசிக்கும் சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு எம். ஜி. அபேரத்ன பண்டார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.09.09 ஆந் திகதியுடைய 11673 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆகவே 2006.01.25 ஆந் திகதிக்கு இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் மீது வங்கிக்குச் செலுத்தப்பட

வேண்டிய மூன்று இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தி ஒரு ரூபா முப்பத்தி ஆறு சதம் (ரூ. 3,06,851.36) பணமும் அத்தினத்திலிருந்து இரண்டு இலட்சத்து நாற்தெட்டாயிரத்து தொளாயிரத்து முப்பத்திநான்கு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 2,48,934.12) மீது ஆண்டொன்றுக்கு இருபத்தி இரண்டு தசம் எட்டு நான்கு (22.84%) சதவீதப்படி வட்டியும் ஏலவிற்பனை திகதிவரை வட்டி அறவிடப்படவும், கடன் பெறப்பட்டிருப்பதால் குறிப்பிட்ட பணத்தை அல்லது விற்பனை திகதி வரை செலுத்தப்படாமல் மீதியாக இருக்கும் ஏதும் பகுதியையும் விளம்பரம், விற்பனைக்காக செலவிடப்பட்ட எல்லாச் செலவினங்களையும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவுகள் ஏதேனும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட சட்டத்தின் விதிமுறையின் கீழ் வங்கியின் பதிவு செய்யப்பட்ட ஏலதாரர் சொக்மன் அன்ட் சமர விக்ரம நிறுவனத்தின் மூலம் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டுமென கந்துரட்ட அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேற்கண்ட வங்கிக்கு மேற்கண்ட 11673 ஆம் இலக்க ஈட்டு முறியால் ஈடுவைக்கப்பட்ட மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உட ஹேவாஹெட்ட தற்போது வலப்பனை, பல்லேகம்பஹ கோரளையில் அமைந்துள்ள "மாலிகாதென்ன" என்ற காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பர்னாட் பி. ரூபசிங்ஹ அவர்களால் 1983 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 191 ஆம் இலக்க வரைபடத்தின் 03 ஆம் இலக்க காணிக்கான எல்லைகள் - வடகிழக்கு : டி. எல். ஜுசே பெரேராவுக்குச் சொந்தமான காணி ; கிழக்கு : குறிப்பிட்ட வரைபடத்தின் 04 ஆம் இலக்க காணி ; தெற்கு : ரிகில்லகஸ்கடயிலிருந்து வத்துமுல்லைசெல்லும் பாதை ; மேற்கு : குறிப்பிட்ட வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணி என்ற எல்லைக்குட்பட்ட மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.50பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதன்கண் அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக.

இது நுவரெலியா காணிப்பதிவகத்தில் R/255/95 இன் கீழ் 2003.09.15 ஆந் திகதி பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

எச். எம். கே. பி. ஹெல்லராவ,
பொது முகாமையாளர்.

கந்துரட்ட அபிவிருத்தி வங்கி,
இல. 130, கட்டுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

12-198

---

## வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வங்கிப் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0070 - 00050066 - 001 (இரத்தினபுரி கிளை)

1990 ஆம் ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2006.10.04 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது:-

"இரத்தினபுரியில் 'சில்வர்ன்ட் ரீ கம்பனி' என்ற பெயர் மகுடத்தினதும் நிறுவனத்தினதும் கீழும் A6956 என்ற வியாபாரப் பதிவிலக்கத்தின்கீழும் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற சூலனி சரத் நாஒட்டுன்ன என்பவர் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். சி. ஓ. த லிவேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990 ஏப்பிறல் 24 ஆந் திகதிய 168 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2005, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து எண்பத்திநான்காயிரத்து முந்நூற்று எண்பத்தாறு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 1,23,84,386.12) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1,23.84,386.12 பணத்தொகையையும் 2006, சனவரி 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 168 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும், இதுற்கான அட்டவணையில் மேலும் விபரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

இரத்தினபுரி மாவட்டத்தில், சபரகமுவ மாகாணத்தில் குருவிட்டி கோறளேயின் உடபத்து தெற்கில் இரத்தினபுரி உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள், இரத்தினபுரி மாநகர சபையின் பொம்பகலே வட்டாரம், மல்வல வீதியில் அமைந்துள்ளதும் இரத்தினபுரி மாவட்ட நீதிமன்ற பிரிவிடல் வழக்கு இல. 9796 இல் பதிவுச்சான்றாகத் தாக்கல் செய்யப்பட்ட, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. பி. ஏ. தம்பையாவால் வரையப்பட்டு தயாரிக்கப்பட்ட 1958, நவெம்பர் 6 ஆந் திகதிய 1751 ஆம் இலக்க பிரிவிடல் வரைபடத்தின் இறுதித் திட்டத்தில் துண்டு 3 எனக் காட்டப்பட்டு விவரிக்கப்பட்டதும் 21, மல்வல வீதி என்ற வரி மதிப்பீட்டிலக்கம் கொண்டதும் 'ஹேவாயாலகேகணத்த' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதுமான காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சேர்த்து இதன் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 21 எனக் காட்டப்பட்ட வீதி ; கிழக்கு : பெரு வீதி ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 1751 இல் துண்டு 10 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 21 எனக் காட்டப்பட்ட வீதி. ஒரு றூட் முப்பத்தொன்பது பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 39பே.) விஸ்தீரணமுள்ள இது இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 590/143 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

12-182/4

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2006 |
| | | வெள்ளி | 08.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2006 |
| | | வெள்ளி | 15.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2006 |
| | | வெள்ளி | 22.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2006 |
| | | வெள்ளி | 29.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2006 |

**அட்டவணை-2007**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 05.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.12.2006 |
| | | வெள்ளி | 12.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.12.2006 |
| | | வெள்ளி | 19.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.01.2007 |
| | | வெள்ளி | 26.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.01.2007 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 02.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.01.2007 |
| | | வெள்ளி | 09.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.01.2007 |
| | | வியாழன் | 15.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.02.2007 |
| | | வெள்ளி | 23.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.02.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.